# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம் 09-12-2024 திங்கள் கிழமை மாலை 3.00** மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண்.1.

.குழித்துறை நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 21 வரையிலும் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை மாற்றியமைப்பதற்கு 17 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதற்கான பத்திரங்கள் மற்றும் விண்ணப்பங்களின் பதிவேற்றக்கட்டணமாக ரூ.5100/- திரு.தா. ராஜேந்திரன், மின்கம்பியாளரால் செலவிடப்பட்டுள்ளது. எனவே செலவினத்தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.336/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1093 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சொத்துவரி விதிப்பு சம்மந்தமாக W.P.(MD)No.5089/2020 என்ற வழக்கிற்கு இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார்,BA.,LLB., அவர்களிடமிருந்து கீழ்கண்ட விபரப்படி கட்டணமாக ரூ.3500/- வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | Vakkalath Fee | - | 1000/- |
| 2) | Written Statement Fee | - | 2000/- |
| 3) | Clerk Fees | - | 500/- |
| | | | -------------- |
| | | | 3500/- |
| | | | -------------- |

மேற்படி தொகையினை அன்னாருக்கு நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.633/2020/அ1.

மன்றத்தீர்மான எண்.1094 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் M.C.C. கட்டிடத்தில் தற்காலிக காய்கறி சந்தையாக கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலவிளம்பரம் மதுரை மணி தினசரி செய்தி நாளிதழில் 05-11-2024 பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு தொகை ரூ.27,531/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை மதுரை மணி நாளிதழுக்கு வழங்கிடவும் இத்தொகையினை பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2170/2024/அ2.

மன்றத்தீர்மான எண்.1095 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் தடையின்றி பணிகள் மேற்கொள்ள கேவியட் மனு தாக்கல் செய்த வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களாக ரூ.5,000/-க்கான செலவினத்தொகையினை இந்நகராட்சியின் வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.913/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.1096 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் கருங்கல் சாலையில் அமைந்துள்ள தற்காலிக காய்கறி சந்தைக்கு வந்து போகும் வாகனங்களிடமிருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3066/2022/அ2.

மன்றத்தீர்மான எண்.1097 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சியில் மார்த்தாண்டம் மேம்பாலம் மேற்கு பகுதி முடிவில் பம்மத்தில் உள்ள உயர்மின் விளக்கு பழுது ஏற்பட்டு உயர்மின் விளக்கின் கம்பம் தனியாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அப்புறப்படுத்தப்பட்ட உயர் மின் விளக்கு கம்பத்தினை அதே இடத்தில் அமைத்து மின்விளக்கு பொருத்த உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2847/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1098 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சியில் குழித்துறை சந்திப்பில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு செல்லும் பாதை பழுது ஏற்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி கழிப்பிடத்தின் பாதையினை சரி செய்திட ரூ.1,30,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்ப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2848/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1099 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சியின் கல்லுகட்டி மற்றும் குழித்துறை சந்திப்பு ஆகிய இரண்டு சாலைகளில் உள்ள பயணிகள் நிழற்குடைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ளது. மேலும் மார்த்தாண்டம் பாலம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள பயணிகள் நிழற்குடைகள் வர்ணம் பூச வேண்டியுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பணி மேற்கொள்ள ரூ.3,00,000/- உத்தேச மதிப்பீடு தயார் செய்ப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2849/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1100 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் எண்.TN.74V.4642 கொண்ட (Manindra & Mahindra Load king Super) வாகனம் 2006-ம் ஆண்டு வாங்கப்பட்டு அதிக தூரம் ஓடிய நிலையில் பழுதுகள் தொடர்ந்து ஏற்பட்டு வந்த நிலையில் வாகனம் இயக்க முடியாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.மேலும் அரசு தானியங்கி பணிமனை நாகர்கோவில் அவர்களால் பொது ஏலம் விட்டு விற்பனை செய்திட தெரிவிக்கப்பட்டதின் பேரில் கழிவு நீக்கம் செய்திட தமிழ்நாடு மோட்டார் வாகனத்துறை சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனத்தை கழிவு நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.877/2013/இ1.

மன்றத்தீர்மான எண்.1101 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

மேலாளர்,
குழித்துறை நகராட்சி.